# 30-04-2024 செய்தி

## 1,352 வேட்பாளர்களில் 9% பேர் மட்டுமே பெண்கள்

- போட்டியிடும் 1,352 வேட்பாளர்களின் தேர்தல் பிரமாண பத்திரங்களை ஜனநாயக சீர்திருத்த சங்கம், தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு ஆகியவை ஆராய்ந்தன.
- இந்த ஆய்வின்படி, 1,352 வேட்பாளர்களில் 244 பேர் மீது குற்ற வழக்குகள் உள்ளன.172 பேர் மீது தீவிர குற்ற வழக்குகள் உள்ளன.
- 38 பேர் மீது பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகளும், 17 பேர் மீது வெறுப்புணர்வு பேச்சு தொடர்பான வழக்குகளும் உள்ளன.
- மேலும் போட்டியிடும் வேட்பாளர்களில் 9% மட்டுமே பெண்கள் என்பதும் தெரியவந்தது.

## 'பெல்லோ' கருவிக்கு மத்திய அரசு காப்புரிமை

- மின்மாற்றியில் ஏற்படும் ஈரப்பதத்தை குறைக்கும் விதமாக, ஏற்கெனவே இருக்கும் சிலிக்கான் ஜெல்லுடன் இணைத்து சுருங்கி விரிவடையும் வகையிலான பெல்லோ எனும் புதிய தொழில் நுட்பத்தினாலான கருவியை தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்கள் கண்டுபிடித்தனர்.
- இந்த பெல்லோ கருவியை பொருத்தியதன் மூலம் வெளிப்புற ஈரப்பதம் மற்றும் ஆக்சிஜனில் இருந்து முழுமையாக மின்மாற்றி பாதுகாக்கப்பட்டு வருகிறது.
- மேலும், மின்மாற்றியின் பராமரிப்பு செலவு, நேரம் மற்றும் அவ்வப்போது பழுதடைவது தடுக்கப்படுகிறது.
- இந்நிலையில், மின்வாரியத்தால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பெல்லோ கருவிக்கு காப்புரிமை கேட்டு, இந்திய காப்புரிமை அலுவலகத்தில் 2015-ம் ஆண்டு மின்வாரியம் விண்ணப்பித்தது.
- இந்நிலையில், தற்போது இந்த பெல்லோ கருவிக்கு 20 ஆண்டுகளுக்கு காப்புரிமையை இந்திய காப்புரிமை அலுவலகம் வழங்கி உள்ளது.

SURESH'